**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 103/2019 |
| | | D/W's | : | **DW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | அழகு | CASTE | : | |
| S/O | சோத்தான் (லேட்) | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | கோடாங்கிப்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 64 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.02.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. வாதி என் உடன்பிறந்த சகோதரர். 3 முதல் 8 பிரதிவாதிகள் எனது சகோதரர்கள், சகோதரிகள், சகோதர மற்றும் சகோதரிகளின் மகன் மற்றும் மகள்கள் ஆவார்கள். 1ம் பிரதிவாதி எங்களின் தகப்பனார். வழக்குச்சொத்துக்கள் கோடாங்கிப்பட்டி கிராம சர்வே எண் 104/2, 44 செண்ட் மற்றும் புதிய சர்வே எண் 213/2ல் நத்தம்மனை என்றால் சரிதான். வாதி வழக்குச் சொத்தில் 1/8 பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2. வழக்கில் 30.08.2018 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 8ம் பிரதிவாதிக்கு எழுதிவைக்கப்பட்ட பத்திரத்தை செல்லாது என்று பரிகாரம் கேட்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு கிரையச்சொத்துக்கள் மற்றும் பூர்வீக சொத்துக்கள் என்று உள்ளன என்றால் சரிதான். எனது அப்பா விவசாயம் மட்டும் தான் பார்த்து வந்தார், வேறு வேலை பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதியின் மகன்கள் அனைவரும் விவசாயம் மட்டும்தான் பார்த்துவந்தார்கள்.

3. வாதி தையல் வேலை செய்கிறார் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் எனக்கும் எனது சகோதர சகோதரிகளுக்கும் திருமணம் நடந்தபின்தான் வாதிக்கு திருமணம் நடந்தது. 4, 7 பிரதிவாதிகள் அவர்களது திருமணத்திற்குபின் தனிக்குடித்தனம் சென்றுவிட்டார்கள். எனக்கு 1993ல் திருமணம் நடந்தது. எனது திருமணத்திற்குபின் எனது தகப்பனாரும் எனது தாயாரும் வாதியுடன் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

4. எனது தகப்பனாருக்கு ரேஷன் அட்டை இருந்தது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தகப்பனாரின் **ரேஷன் அட்டை.( மேற்படி ரேஷன் அட்டை வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதி அவர் தையல் வேலை செய்து வந்த வருமானத்தை எனது தகப்பனாருக்கும் தாயாருக்கும் செலவிட்டார் என்றால் சரியல்ல. வாதி அவரது சம்பளத்தை எனது

தாயாருக்கும் தகப்பனாருக்கும் செலவு செய்தார் என்றாலும் அதை நான் வழக்கிற்காக மறுப்பு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. வழக்கின் 1ம் இலக்க சொத்து முதலில் அய்யாத்துரை ராவுத்தர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எங்களது தகப்பனாரின் அப்பா பெயர் பிச்சன்அம்பலம். மேற்படி பிச்சன் அம்பலம் 1ம் இலக்கச்சொத்தான 44 செண்டை 22.04.1954ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எங்களது தாத்தா பிச்சன் அம்பலம் அவரது ஆயுட்காலம் வரை 1ம் இலக்கச்சொத்தை எந்த வித பாராதீனமும் செய்யாமல் அனுபவம் செய்தார் என்றால் சரிதான்.

6. மேற்படி எங்கள் தாத்தா இறந்தபின் 1ம் இலக்க சொத்தை 1ம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் ஒன்றாக அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தைதான் 1ம் பிரதிவாதி 8ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி எழுதிவைத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் அந்த சொத்து 1ம் பிரதிவாதிக்கு வழிமுறையாக பூர்வீக பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. 2ம் இலக்கச்சொத்தான நத்தம் மனையிடத்தின் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி வீடுகளுக்கு முந்தைய அரசாங்கம் இருந்தபோது மின்இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீடுகளுக்கு கோடாங்கிப்பட்டி கிராம நிர்வாகம் வீட்டுவரி வசூலிக்கப்படுகிறது. மேற்படி வீட்டுவரி ரசீதுகளை பார்க்க 2ம் இலக்கச்சொத்து 1ம் பிரதிவாதியின் குடும்பத்ினருக்கு பொதுவாக பாத்தியப்பட்டது என்று தெரியவரும் என்றால் சரியல்ல.

8. வழக்குச்சொத்தான 2 சொத்துக்கள்போக 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய வேறு சொத்துக்களும் உள்ளன என்றால் சரிதான். மற்ற சொத்துக்களின் சர்வே எண் 2/6, 3/1 என்றால் எனக்குத்தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை அவரது நான்கு மகன்களுக்கும் பழனியாண்டி என்பவருக்கு 35 செண்டு, பிச்சைக்கு 45 செண்டு போசுக்கு 44 செண்டு, அழகுக்கு 44 செண்டு என்று பிரித்துக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, எனக்கு எந்த பங்கும் தரவில்லை.

9. மேற்சொன்னவாறு 1ம் பிரதிவாதி சொத்துக்களை பிரித்துவிட்டு வாதிக்கு திருமணம் ஆகவில்லை என்பதால் அந்த செலவிற்காக 33 செண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு 1ம் பிரதிவாதி எங்களுக்கு அவரது சொத்தை பிரித்துக்கொடுத்தார் என்றாலும் வழக்கிற்காக அதை பொய்யாக மறுத்துச்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி வயதான காலத்தில் அவரையும் தாயாரையும் வாதி கவனித்துக்கொண்டதால் 1ம் பிரதிவாதி வாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

10. மேற்படி தானசெட்டில் பத்திரத்தின் அடிப்படையில் அந்த சொத்துக்கள் வாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். வழக்குச்சொத்துக்களில் வாதி பங்கு கேட்டவுடன் நான் 1ம் பிரதிவாதியை மதுரை வருவாய் கோட்டாட்சியரிடம் அழைத்துச்சென்று மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நீக்கம் செய்ய மனு செய்ய வைத்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இறக்கும்பொழுது சுமார் 90 வயதிருக்கும். 1ம் பிரதிவாதியால் தனியாக எங்கேயும் வெளியே செல்லமுடியும் என்றால் சரியல்ல.

11. 1ம் பிரதிவாதி வழக்கில் Formal தரப்பினர் என்றாலும் அவர்செய்த செயல்களை நான் சொல்லிதான் செய்தார் என்றாலும் சரியல்ல. மதுரை கோட்டாட்சியரின் உத்தரவை எதிர்த்து வாதி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மனு செய்து அந்த உத்தரவின்படி கோட்டாட்சியரின் உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்குத்தெரியாது. 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எதிர்வழக்குரையில் குறிப்பிடாமல் எனது முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 5ல் குறிப்பிட்டுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

// True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.